ரூத் - முன்னுரை

காலமும் இடமும்

இந்தப் புஸ்தகத்தின் மூலப்பிரதி எழுதப்பட்ட காலம் சுமார் கி.மு. 1600 - 1500 வருஷமாகும். இந்தப் புஸ்தகத்தின் தற்போதுள்ள பகுதி எழுதப்பட்ட காலம் சுமார் கி.மு. 1163 - 1123 வருஷமாகும். இதைச் சாமுவேல் தீர்க்கதரிசி எழுதியிருக்க வேண்டும். அல்லது ஏசாயா தீர்க்கதரிசி இந்தப் புஸ்தகத்தின் தற்போதுள்ள பகுதியைச் சுமார் கி.மு. 743 - 683 ஆவது வருஷத்தில் எழுதியிருக்க வேண்டும்.

ஆசிரியர்

சாமுவேல் அல்லது ஏசாயா. தாவீதின் வம்சவழியை விளக்குவதற்காக இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. ரூத் இந்தப் புஸ்தகத்தை எழுதியதற்கு எந்தவிதமான ஆதாரமுமில்லை. சாமுவேல் இந்தப் புஸ்தகத்தை எழுதினார் என்று யூதருடைய பாரம்பரிய வரலாறு கூறுகிறது. நியாயாதிபதிகளின் காலத்திற்குப் பின்பு, இந்தப் புஸ்தகம் இப்போதுள்ள வடிவத்தின் பிரகாரம் கோர்க்கப்பட்டிருக்கிறது. (ரூத் 1:1)

மையக்கருத்து

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரரின் வரலாற்று நிகழ்ச்சிகளை இந்தப் புஸ்தகம் விவரிக்கிறது. இதில் உறவின்முறை மீட்பைப் பற்றிய பிரமாணம் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் வரும் புறஜாதி ஸ்திரீயைப் பற்றிய விவரமும், பாரேசிலிருந்து தாவீது வரையிலுமுள்ள தாவீதின் வம்சவரலாற்றைப் பற்றிய விவரமும் இந்தப் புஸ்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 4

வசனங்கள் - 85

கேள்விகள் - 16

புதிய தீர்க்கதரிசனங்கள் - இல்லை.

கட்டளைகள் - 30

வாக்குத்தத்தங்கள் - 2

பொருளடக்கம்

I. எலிமெலேக்குவின் குடும்பம்

1. கானான் தேசத்திலே பஞ்சம் (1:1-2)
2. எலிமெலேக்கு, அவனுடைய இரண்டு குமாரர் ஆகியோரின் மரணம் (1:3-5)
3. நகோமி தன் சொந்த ஜனத்தாரிடம் திரும்பிவர ஆயத்தமாகிறாள் (1:6-7)
4. தன் சொந்த ஊருக்குப் போகுமாறு ரூத் சோதிக்கப்படுகிறாள் (1:8-13)
5. ரூத் தன் மாமியைப் பற்றிக் கொள்கிறாள் (1:14-17)
6. நகோமி இஸ்ரவேல் தேசத்திற்குத் திரும்பி வருகிறாள் (1:18-22)

II. உறவின்முறை மீட்பைப் பற்றி நகோமியின் திட்டம்

1. போவாஸ் - உறவின் முறையான் (2:1)
2. நகோமியின் திட்டம் (2:2-3)
3. போவாஸ் ரூத்தின்மீது கிருபையாயிருக்கிறான் (2:4-14)
4. ரூத் அரிக்கட்டுகள் நடுவிலே கதிர்பொறுக்கிக் கொள்ளலாம் (2:15-18)
5. நகோமியின் ஆலோசனை (2:19-22)
6. ரூத் போவாசுடைய வேலைக் காரிகளோடேகூடியிருக்கிறாள் (2:23)
7. போவாஸ் ரூத்தின் உறவின் முறையான் (3:1-2)
8. நகோமியின் ஆலோசனை (3:3-4)
9. ரூத் நகோமிக்குக் கீழ்ப்படிகிறாள் (3:5-9)

ரூத் - முன்னுரை

III. உறவின்முறை மீட்பின் நிறைவேற்றம்

1. பட்டணத்து மூப்பரோடு ஆலோசனை *(3:10-12)*

10. போவாஸின் பதட்டம் *(3:13-14)*

11. நீர் சுதந்தரவாளி *(3:15-18)*

12. ரூத்துக்கு ஆசீர்வாதமான வார்த்தை *(4:1-7)*

2. போவாஸ் உறவின்முறை மீட்பை நிறைவேற்றுகிறார் *(4:8-10)*

3. மூப்பர்களின் ஆசீர்வாதம் *(4:11-12)*

4. உறவின்முறை மீட்பின் ஆசீர்வாதம் *(4:13-17)*

IV. பேரேசுடைய சந்ததி *(4:18-22)*

ரூத் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. எலிமெலேக்குவின் குடும்பம்

1. கானான் தேசத்திலே பஞ்சம்

ரூத் 1:1 நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; அப்பொழுது யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஒரு மனுஷன் தன் மனைவியோடும் இரண்டு குமாரரோடுங்கூட மோவாப் தேசத்திலே போய்ச் சஞ்சரித்தான்.

ரூத் 1:2 அந்த மனுஷனுடைய பேர் எலிமெலேக்கு, அவன் மனைவியின் பேர் நகோமி, அவனுடைய இரண்டு குமாரரில் ஒருவன் பேர் மக்லோன், மற்றொருவன் பேர் கிலியோன்; யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊராகிய எப்பிராத்தியராகிய அவர்கள் மோவாப்தேசத்திற்குப் போய், அங்கே இருந்துவிட்டார்கள்.

"நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில்" - வேதாகமத்தில் ஐந்து இடங்களில் இதுபோன்று "நாட்களில்" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியம் இதற்கு முன்பு ஏற்பட்ட உபத்திரவத்தையும், அதைத் தொடர்ந்து வரும் மீட்பையும், சந்தோஷமான முடிவையும் குறிக்கும். (ரூத் 1:1; ஆதி 14:1; எஸ் 1:1; ஏசா 7:1; எரே 1:3).

ரூத் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம்

நியாயாதிபதிகளின் ஆரம்ப நாட்களில் ரூத் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ரூத் 4:21-22 ஆகிய வசனங்களில் போவாசைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. இவன் சல்மோனின் குமாரன். சல்மோன் எரிகோவிலிருந்த ராகாப் என்னும் வேசியை விவாகம் செய்திருந்தான். (மத் 1:5). எரிகோவை இஸ்ரவேல் புத்திரர் ஜெயித்தபின்பு, சல்மோன் ராகாபை விவாகம் பண்ணியிருந்திருக்க வேண்டும். யோசுவாவின் காலத்திலிருந்து சவுலின் காலம் வரையிலுமுள்ள இடைப்பட்ட வருஷங்கள் சுமார் 520 வருஷங்களாகும். இந்தக் காலத்தின் ஆரம்பத்தில் சல்மோனின் விவாகம் சுமார் 50 அல்லது 75 ஆவது வருஷத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். போவாசின் ஜீவியக்காலம் இந்தக் காலத்தின் ஆரம்பத்தில் சுமார் நூறாவது வருஷத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். இந்நாட்களில் ஒத்னியேல் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து வந்தான். (நியா 3:9-11) இக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் மோவாபியரிடம் 18 வருஷங்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள். அல்லது இக்காலம் ஏகூத்தின் நாட்களில் நடைபெற்றிருக்க வேண்டும். (நியா 3:15-20).

இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றில் இந்த வரலாற்றுக்காலத்தில் இடம் பெற்றிருக்கும் எல்லா புருஷர்களின் பெயர்களும் குறிப்பிடப் படவில்லை. சல்மோனின் காலத்திலிருந்து தாவீதின் பிறப்பு வரையிலும் நான்கு பேர்களின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான்கு பேர்கள் மட்டும் இத்தனை வருஷங்களாக உயிரோடிருந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. சல்மோன், போவாஸ், ஓபேத், ஈசாய், ஆகிய ஒவ்வொருவரும் சராசரியாக 125 வருஷங்கள் வாழ்ந்திருப்பதற்கும் வாய்ப்பில்லை. ஆகையினால் இதற்கு இடைப்பட்ட காலங்களில் இயேசுவின் வம்சவரலாற்றில் வேறுசிலரும் இடம் பெற்றிருக்க வேண்டும்.

வேதபண்டிதர்களும் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, அந்த வரலாற்றில் அனைவருடைய பெயரும் இடம் பெறவில்லை என்று கருத்துக் கூறுகிறார்கள். (ரூத் 4:20-22; மத் 1:4-6, 8,11; லூக்கா 3:31-32).

"மோவாப் தேசம்" - நியாயாதிபதிகளின் நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் மோவாபியரிடம் 18 வருஷங்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள். (நியா 3:14).

"எலிமெலேக்கு" (**Elimelech**) - இதற்கு "என் தேவன் ராஜாவாயிருக்கிறார்" **"my God is King"** என்று பொருள். (நியா 1:2-3; நியா 2:1-3; நியா 4:3,9).

"நகோமி" (**Naomi**) - இதற்கு "எனக்கு பிரியமானவள்" **"my pleasant one"** என்று பொருள்.

ரூத் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. எலிமெலேக்குவின் குடும்பம்

1. கானான் தேசத்திலே பஞ்சம்

ரூத் 1:1 நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; அப்பொழுது யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஒரு மனுஷன் தன் மனைவியோடும் இரண்டு குமாரரோடுங்கூட மோவாப் தேசத்திலே போய்ச் சஞ்சரித்தான்.

ரூத் 1:2 அந்த மனுஷனுடைய பேர் எலிமெலேக்கு, அவன் மனைவியின் பேர் நகோமி, அவனுடைய இரண்டு குமாரரில் ஒருவன் பேர் மக்லோன், மற்றொருவன் பேர் கிலியோன்; யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊராகிய எப்பிராத்தியராகிய அவர்கள் மோவாப்தேசத்திற்குப் போய், அங்கே இருந்துவிட்டார்கள்.

"நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில்" - வேதாகமத்தில் ஐந்து இடங்களில் இதுபோன்று "நாட்களில்" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியம் இதற்கு முன்பு ஏற்பட்ட உபத்திரவத்தையும், அதைத் தொடர்ந்து வரும் மீட்பையும், சந்தோஷமான முடிவையும் குறிக்கும். (ரூத் 1:1; ஆதி 14:1; எஸ் 1:1; ஏசா 7:1; எரே 1:3).

ரூத் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம்

நியாயாதிபதிகளின் ஆரம்ப நாட்களில் ரூத் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ரூத் 4:21-22 ஆகிய வசனங்களில் போவாசைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. இவன் சல்மோனின் குமாரன். சல்மோன் எரிகோவிலிருந்த ராகாப் என்னும் வேசியை விவாகம் செய்திருந்தான். (மத் 1:5). எரிகோவை இஸ்ரவேல் புத்திரர் ஜெயித்தபின்பு, சல்மோன் ராகாபை விவாகம் பண்ணியிருந்திருக்க வேண்டும்.

"மக்லோன்" **(Mahlon)** - இதற்கு "வியாதி" **"sick"** என்று பொருள். (ரூத் 1:2-5; நியா 4:9-10).

"கிலியோன்" **(Chilion)** - இதற்கு "அழிவு, சிறகை ஒடிப்பது" **"pining"** என்று பொருள். (ரூத் 1:2-5; நியா 4:9).

"பெத்லெகேம் ஊராகிய எப்பிராத்தியர்" - பெத்லெகேமின் பழங்காலப் பெயர் எப்பிராத்து. இங்கு ராகேல் அடக்கம் பண்ணப்பட்டாள். (ஆதி 35:19; ஆதி 48:7) இங்கு தாவீது வசித்து வந்தார். (1சாமு 17:12). மறுபெயர் **(Ephratah)** (ரூத் 4:11; 1நாளா 4:4; சங் 132:6; மீகா 5:2).

2. எலிமெலேக்கு, அவனுடைய இரண்டு குமாரர் ஆகியோரின் மரணம்

ரூத் 1:3 நகோமியின் புருஷனாகிய எலிமெலேக்கு இறந்துபோனான்; அவளும் அவளுடைய இரண்டு குமாரரும்மாத்திரம் இருந்தார்கள்.

ரூத் 1:4 இவர்கள் மோவாபியரில் பெண் கொண்டார்கள்; அவர்களில் ஒருத்தி பேர் ஓர்பாள், மற்றவள் பேர் ரூத்; அங்கே ஏறக்குறையப் பத்துவருஷம் வாசம் பண்ணினார்கள்.

ரூத் 1:5 பின்பு மக்லோன் கிலியோன் என்னும் அவர்கள் இருவரும் இறந்து போனார்கள்; அந்த ஸ்திரீ தன் குமாரர் இருவரையும் தன் புருஷனையும் இழந்து தனித்தவளானாள்.

"மோவாபியரில் பெண் கொண்டார்கள்" - மோவாபியரோடு பெண்கொள்ளக்கூடாது என்று விசேஷித்த பிரமாணம் எதுவுமில்லை. ஆனாலும் இஸ்ரவேலரின் விவாகத்தைப் பற்றிய பொதுவான பிரமாணம் இதைத் தடைபண்ணுகிறது. (உபா 7:3) இஸ்ரவேல் புத்திரர் கானானியரோடு சம்பந்தம் பண்ணக் கூடாது. (உபா 23:3).

"ஓர்பாள்" **(Orpah)** - இதற்கு "சிறுமான்" **"gazelle"** என்று பொருள். (ரூத் 1:4,14).

ரூத் - தொகுப்புரை

1 அதிகாரம்

"ரூத்" (Ruth) - இதற்கு "சிநேகம்" **"friendship"** என்று பொருள். (மத் 1:5)

"மக்லோன் கிலியோன் என்னும் அவர்கள் இருவரும் இறந்துபோனார்கள்" - நகோமியின் புருஷனும், அவளுடைய இரண்டு குமாரர்களும் பத்து வருஷக்காலத்திற்குள் இறந்து போனார்கள். யூதருடைய வரலாறு இவர்களுடைய மரணத்தைப் பற்றி விளக்குகிறது. இவர்கள் அந்நிய ஸ்திரீகளை விவாகம் பண்ணியதினால் சொற்ப வயதில் மரித்துப் போனார்கள் என்று யூதருடைய பாரம்பரிய வரலாறு கூறுகிறது. மோவாபியரோடு சேர்ந்து, விக்கிர காராதனையில் ஈடுபட்டிருந்தால், கர்த்தருடைய கோபம் இவர்களுக்கு எதிராக எழும்பியிருக்கும். (ரூத் 1:4-5). கர்த்தருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்த மனுஷருக்கு நீண்ட ஆயுசு ஆசீர்வாதமாகக் கூறப் பட்டிருக்கிறது. பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வில்லையென்றால் மனுஷருடைய ஆயுசு நாட்கள் குறைந்துபோகும். (லேவி 26; உபா 28).

3. நகோமி தன் சொந்த ஜனத்தாரிடம் திரும்பிவர ஆயத்தமாகிறாள்

ரூத் 1:6 கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று அவள் மோவாப் தேசத்திலே கேள்விப்பட்டு, தன் மருமக்களோடேகூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவரும்படி எழுந்து,

ரூத் 1:7 தன் இரண்டு மருமக்களோடுங் கூடத் தானிருந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டாள். யூதா தேசத்திற்குத் திரும்பிப்போக, அவர்கள் வழிநடக்கையில்,

"அவள் மோவாப்தேசத்திலே கேள்விப்பட்டு" - யூதருடைய பாரம்பரிய வரலாற்று ஒரு தேவதூதன் இந்தச் செய்தியை அவளுக்குக் கூறியதாகக் கூறுகிறது.

"மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவரும்படி எழுந்து" - இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சம் உண்டானதால் இவர்கள் மோவாப் தேசத்திற்குப் போனார்கள். (ரூத் 1:1) கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளியதினால் இவர்கள் திரும்பவும் வாக்குத்தத்த தேசத், திற்குத் திரும்பி வருகிறார்கள்.

"தன் இரண்டு மருமக்களோடுங்கூட" - இரண்டு மருமக்களும் மாமியாரோடு யூதா தேசத்திற்குப் போனார்கள். ஆனால் மோவாப் தேசத்திற்குத் திரும்பிப் போகலாம் என்னும் வாய்ப்பு கொடுக்கப்பட்டபோது, ஒரு மருமகள் மோவாப் தேசத்திற்குத் திரும்பிப் போய்விட்டாள். (ரூத் 1:7-22).

4. தன் சொந்த ஊருக்குப் போகுமாறு ரூத் சோதிக்கப் படுகிறாள் - (வசனம் 15)

ரூத் 1:8 நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி: நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்; மரித்துப் போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயைசெய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக.

ரூத் 1:9 கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று சொல்லி, அவர்களை முத்தமிட்டாள். அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு அழுது, அவளைப் பார்த்து:

ரூத் 1:10 உம்முடைய ஜனத்தண்டைக்கே உம்முடன் கூட வருவோம் என்றார்கள்.

ரூத் 1:11 அதற்கு நகோமி: என் மக்களே, நீங்கள் திரும்பிப்போங்கள்; என்னோடே ஏன் வருகிறீர்கள்? உங்களுக்குப் புருஷராகும்படிக்கு, இனிமேல் என் கர்ப்பத்திலே எனக்குப் பிள்ளைகள் உண்டாகுமோ?

ரூத் - தொகுப்புரை

1 அதிகாரம்

ரூத் 1:12 என் மக்களே, திரும்பிப் போங்கள்; நான் வயதுசென்றவள்; ஒரு புருஷனுடன் வாழத்தக்கவளல்ல; அப்படிப்பட்ட நம்பிக்கை எனக்கு உண்டாயிருந்து, நான் இன்று இரவில் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு, பிள்ளைகளைப் பெற்றாலும்,

ரூத் 1:13 அவர்கள் பெரியவர்களாகு மட்டும், புருஷருக்கு வாழ்க்கைப்படாத படிக்கு நீங்கள் பொறுத்திருப்பீர்களோ? அது கூடாது; என் மக்களே கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறதினால், உங்கள் நிமித்தம் எனக்கு மிகுந்த விசனம் இருக்கிறது என்றாள்.

நகோமி தன் மருமக்களுக்கு கூறிய ஆசீர்வாதம்

1. மரித்துப்போன என் குமாரர்களுக்கும், எனக்கும் நீங்கள் தயைசெய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக. (ரூத் 1:9)

2. கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புதிய புருஷனுடைய வீட்டிலே உங்களைச் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக.

"அவர்கள் சத்தமிட்டு அழுது" - இந்த இஸ்ரவேல் ஸ்திரீக்கும், மோவாபிய ஸ்திரீகளுக்கும், நெருக்கமான அன்பு இருந்திருக்க வேண்டும். ஆகையினால் அவர்கள் பிரியும் சூழ்நிலை வந்தபோது, சத்தமிட்டு அழுதார்கள்.

"உம்முடைய ஜனத்தண்டைக்கே உம்முடன் கூட வருவோம்" - இரண்டு மருமக்களையும் மோவாபிய தேசத்திற்குத் திரும்பிப்போய் அங்கு மோவாபியரின் முறைமையின் பிரகாரம் ஜீவிப்பதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. (ரூத் 1:8) ஆனால் அவர்கள் இருவரும் நகோமியோடு கூடப்போவதாக முதலில் தீர்மானம் பண்ணுகிறார்கள். ஆனால் நகோமியோ அங்கு அவர்களுக்கு புருஷரைச் சம்பாதிப்பதற்கு உத்தரவாதம் இல்லை என்று கூறி, அவர்கள் இருவரையும் மோவாப் தேசத்தில் இருக்குமாறு கூறுகிறாள். (ரூத் 1:11-13). அவர்கள் சத்தமிட்டு அதிகமாய் அழுதார்கள். ஓர்பாள் மோவாபிய தேசத்திற்குத் திரும்பிப்போனாள். ரூத் நகோமியைப் பற்றிக் கொண்டாள். (ரூத் 1:14). நகோமி மறுபடியும் ரூத்தைப் பார்த்து அவளையும், அவள் ஜனத்தாரிடத்திற்கும், அவள் தேவர்களிடத்திற்கும் திரும்பிப் போகுமாறு கூறுகிறாள். (ரூத் 1:15) ஆனால் ரூத்தோ நகோமியின் ஜனம் தன்னுடைய ஜனம் என்றும், நகோமியின் தேவன் தன்னுடைய தேவன் என்றும் தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து கூறுகிறாள். (ரூத் 1:16-17). ரூத்தின் இந்தத் தீர்மானத்திற்காக அவள் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டாள். மேசியாவின் வம்சவரலாற்றில் ரூத்தின் பெயர் இடம் பெற்றிருக்கிறது. (ரூத் 1:18-4:22; மத் 1:1-6)

மோவாப் தேசத்திற்குத் திரும்பிப் போகுமாறு நகோமி தன் மருமக்களுக்குக் கூறிய ஆலோசனைகள்

1. நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள். (ரூத் 1:8). இருவரும் நகோமியின் ஆலோசனையைத் தள்ளி விடுகிறார்கள். உம்முடைய ஜனத்தண்டைக்கே உம்முடன் கூட வருவோம் என்றார்கள். (ரூத் 1:10).

2. என் மக்களே, நீங்கள் திரும்பிப்போங்கள்; என்னோடே ஏன் வருகிறீர்கள்? உங்களுக்குப் புருஷராகும்படிக்கு, இனிமேல் என் கர்ப்பத்திலே எனக்குப் பிள்ளைகள் உண்டாகாது. (ரூத் 1:11).

3. என் மக்களே, திரும்பிப்போங்கள்; நான் வயதுசென்றவள்; ஒரு புருஷனுடன் வாழத்தக்கவளல்ல; அப்படிப்பட்ட நம்பிக்கை எனக்கு உண்டாயிருந்து, நான் இன்று இரவில் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு, பிள்ளைகளைப் பெற்றாலும், அவர்கள் பெரியவர்களாகு மட்டும், புருஷருக்கு வாழ்க்கைப் படாதபடிக்கு நீங்கள் பொறுத்திருப்பீர்களோ? அது கூடாது. (ரூத் 1:12-13). நகோமியின் இந்த ஆலோசனையைக் கேட்ட பின்பு, ஓர்பாள் தன் மாமியைவிட்டுப் புறப்பட்டு மோவாப் தேசத்திற்குப் போனாள். (ரூத் 1:14).

ரூத் - தொகுப்புரை

1 அதிகாரம்

4. உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப்போய் விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ (ரூத் 1:15). நகோமியின் இந்த ஆலோசனையை ரூத் ஏற்றுக் கொள்ளவில்லை. நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று ரூத் நகோமியிடம் தன் தீர்மானத்தைக் கூறுகிறாள். (ரூத் 1:16-17).

"கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறது" - நகோமியின் ஜீவியத்தில் உபத்திரவங்கள் உண்டாயிற்று. அவள் தன் புருஷனை இழந்தாள். தன் இரண்டு குமாரர்களையும் இழந்தாள். இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது என்று நகோமி துக்கத்தோடு இருக்கிறாள். வாழ்வில் நடைபெறும் எல்லா துயர சம்பவங்களுக்கும் கர்த்தர் காரணமானவர் அல்ல. பஞ்சம், யுத்தம், கொள்ளைநோய் ஆகியவை ஒரு தனிப்பட்ட நபருடைய சாபத்தினால் வருவதல்ல. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் கலகம் பண்ணியபோது, கர்த்தர் அவர்களுக்கு வாதைகளைக் கொடுத்தார். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தால், இந்தச் சாபங்கள் எதுவும் அவர்களுக்கு வந்திருக்காது. (லேவி 26; உபா 28). கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போன இஸ்ரவேல் தேசத்தாரைக் கர்த்தர் தண்டிக்கச் சித்தம் கொண்டார். அப்போது திரளான துன்மார்க்கரோடு நல்லவர்களும், அந்தத் துயரங்களில் பங்குபெற்றார்கள். நீதிமானுக்கும் துன்பம் வரும். தங்களுக்கு துன்பம் வரும்போது கர்த்தர் தங்களைத் தண்டிக்கிறாரோ என்று நீதிமான் சந்தேகப்படுகிறான். நீதிமானுக்கு வரும் துன்பத்திற்குக் கர்த்தர் காரணமல்ல. திரளான துன்மார்க்கருக்குத் துன்பம் வரும்போது அது நீதிமான் மேலும் நிழலாய்ப் படிகிறது.

5. ரூத் தன் மாமியைப் பற்றிக் கொள்கிறாள்

ரூத் 1:14 அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு அதிகமாய் அழுதார்கள்; ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப் போனாள்; ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொண்டாள்.

ரூத் 1:15 அப்பொழுது அவள்: இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ என்றாள்.

ரூத் 1:16 அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.

ரூத் 1:17 நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்.

ரூத்தின் பிரதிஷ்டை வாக்கியம்

1. உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம்.
2. நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்.
3. நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்.
4. உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்.
5. உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.

ரூத் - தொகுப்புரை

1 அதிகாரம்

6. நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன். (ரூத் 1:17).

7. மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்.

6. நகோமி இஸ்ரவேல் தேசத்திற்குத் திரும்பி வருகிறாள்

ரூத் 1:18 அவள் தன்னோடேகூட வர மனஉறுதியாயிருக்கிறதைக் கண்டு, அப்புறம் அதைக் குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை.

ரூத் 1:19 அப்படியே இருவரும் பெத்லெகேம் மட்டும் நடந்துபோனார்கள்; அவர்கள் பெத்லெகேமுக்கு வந்தபோது, ஊரார் எல்லாரும் அவர்களைக் குறித்து ஆச்சரியப்பட்டு, இவள் நகோமியா என்று பேசிக்கொண்டார்கள்.

ரூத் 1:20 அதற்கு அவள்: நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்.

ரூத் 1:21 நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாகத் திரும்பிவரப் பண்ணினார்; கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கையில், நீங்கள் என்னை நகோமி என்பானேன் என்றாள்.

ரூத் 1:22 இப்படி நகோமி மோவாபிய ஸ்திரீயான தன் மருமகள் ரூத்தோடுங்கூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பி வந்தாள்; வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் அவர்கள் பெத்லெகேமுக்கு வந்தார்கள்.

“அவள் தன்னோடேகூட வர மனஉறுதியாயிருக்கிறதைக் கண்டு” - ரூத் நகோமியோடு வருவதற்கு மனஉறுதியாக இருக்கிறாள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்தில் தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகிறாள். இவ்வளவு மனஉறுதியோடு இருக்கிறவள் தன்னோடு இஸ்ரவேல் தேசத்திற்கு வந்து, கர்த்தருக்குப் பிரியமானபடி ஜீவிப்பாள் என்று நகோமி தன் உள்ளத்தில் தீர்மானம் பண்ணி, ரூத்தைத் தன்னோடு யூதா தேசத்திற்கு அழைத்துச் செல்கிறாள். (ரூத் 1:18-19).

“ஊரார் எல்லாரும் அவர்களைக் குறித்து ஆச்சரியப்பட்டு” - பெத்லெகேமில் எலிமெலேக்கின் குடும்பத்தைப் பற்றி எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். அந்த ஊரில் அவனுக்கு நல்ல மரியாதை இருந்தது. இவன் யூதா கோத்திரத்தான். இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றில் எலிமெலேக்கின் பெயரும் இடம் பெற்றிருக்கிறது. (மத் 1:1-18).

மாராள் (Mara) - מָרָא - maw-raw’ - **4755**

பெண்பால் பெயர்ச்சொல் - மாராள் - இதற்கு கசப்பு (bitter) என்று பொருள்.

“சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்” - இரண்டாம் முறையாக நகோமி தனக்கு ஏற்பட்ட துன்பத்திற்குக் கர்த்தரே காரணம் என்று கூறுகிறாள். (ரூத் 1:13,20-21).

நகோமி கர்த்தருக்கு எதிராகக் கூறிய குற்றச்சாட்டுக்கள்

1. கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறது. (ரூத் 1:13).
2. சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். (ரூத் 1:20).
3. நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாகத் திரும்பிவரப் பண்ணினார். (ரூத் 1:21).
4. கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தினார்.

ரூத் - தொகுப்புரை

1 அதிகாரம்

5. சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கிறார்.

சர்வவல்லவர் (the Almighty) - שַׁדַּי - shad-dah'ee - 7706

ஆ.பெ.சொ. - சர்வ வல்லமை, சர்வ வல்லவர், சர்வத்துவம், வல்லது (ஆதி 17:1).

"மோவாபிய ஸ்திரி" - ஐந்து இடங்களில் ரூத் "மோவாபிய ஸ்திரி" என்று அழைக்கப்பட்டிருக்கிறாள். (ரூத் 1:22; ரூத் 2:2, 21; ரூத் 4:5,10; ரூத் 2:6; 2நாளா 24:26). மோவாபியரின் மனுஷருக்கு மோவாபியர் என்னும் பெயர் மூன்று இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (உபா 23:3; 1நாளா 11:46; நெகே 13:1). மோவாபியர்மீது கூறப்பட்டிருக்கும் சாபம் (உபா 23:3) ரூத்திற்கு வரவில்லை. ஏனெனில் ரூத் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தன்னுடைய தேவனாகத் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டாள்.

2 அதிகாரம்

II. உறவின்முறை மீட்பைப் பற்றி நகோமியின் திட்டம் -

(லேவி25:25-34;எண் 27:1-11; 36:1-13; எரே 32:1-5)

1. போவாஸ் - உறவின் முறையான்

ரூத் 2:1 நகோமிக்கு அவளுடைய புருஷனாகிய எலிமெலேக்கின் உறவின்முறையில் போவாஸ் என்னும் பேருள்ள மிகுந்த ஆஸ்திக்காரனாகிய இனத்தான் ஒருவன் இருந்தான்.

"அவளுடைய புருஷனாகிய எலிமெலேக்கின் உறவின்முறை" - (ரூத் 4:6)

2. நகோமியின் திட்டம்

ரூத் 2:2 மோவாபிய ஸ்திரீயான ரூத் என்பவள் நகோமியைப் பார்த்து: நான் வயல்வெளிக்குப் போய், யாருடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்குமோ, அவர் பிறகே கதிர்களைப் பொறுக்கிக்கொண்டுவருகிறேன் என்றாள்; அதற்கு இவள்: என் மகளே, போ என்றாள்.

ரூத் 2:3 அவள் போய், வயல்வெளியில் அறுக்கிறவர்கள் பிறகே பொறுக்கினாள்; தற்செயலாய் அவளுக்கு நேரிட்ட அந்த வயல்நிலம் எலிமெலேக்கின் வம்சத் தானாகிய போவாசுடையதாயிருந்தது.

"அவர்" - இந்த வார்த்தை போவாசையும் குறிக்கலாம் அல்லது கதிர்களைப் பொறுக்கிக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கும் யாரையும் குறிக்கலாம். ஆயினும் ரூத்திற்கு போவாசின் கண்களில் தயவு கிடைக்கிறது. (ரூத் 1:3-23).

"வயல்வெளியில் அறுக்கிறவர்கள் பிறகே பொறுக்கினாள்" - வயல்வெளிகளின் ஓரங்களில் இருக்கும் தானியங்கள் ஏழைகளுக்காக நியமிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அறுக்கப்படாமல் மீந்திருக்கும் கதிர்களும் ஏழைகளுக்கே உரியது. ஏழைகளை ஆதரிக்க வேண்டுமென்பதற்காக இதுபோன்ற பழக்கம் இஸ்ரவேலில் காணப்படுகிறது. கர்த்தருடைய பிரமாணத்திலும் இதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது.
(லேவி 19:9-10; லேவி 23:22; உபா 24:19, யோபு 24:10)

3. போவாஸ் ரூத்தின்மீது கிருபையாயிருக்கிறான்

ரூத் 2:4 அப்பொழுது போவாஸ் பெத்லெகேமிலிருந்து வந்து, அறுக்கிறவர்களைப் பார்த்து: கர்த்தர் உங்களோடே இருப்பாராக என்றான்; அதற்கு அவர்கள்: கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக என்றார்கள்.

ரூத் 2:5 பின்பு போவாஸ் அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக வைக்கப்பட்ட தன் வேலைக்காரனை நோக்கி: இந்தப் பெண்பிள்ளை யாருடையவள் என்று கேட்டான்.

ரூத் 2:6 அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக வைக்கப்பட்ட அந்த வேலைக்காரன் பிரதியுத்தரமாக: இவள் மோவாப் தேசத்திலிருந்து நகோமியோடே கூட வந்த மோவாபிய பெண்பிள்ளை.

ரூத் 2:7 அறுக்கிறவர்கள் பிறகே அரிக்கட்டுகளிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக் கொள்ளுகிறேன் என்று அவள் என்னிடத்தில் கேட்டுக் கொண்டாள்; காலமே துவக்கி இதுவரைக்கும் இங்கே இருக்கிறாள்; இப்பொழுது அவள் குடிசைக்கு வந்து கொஞ்சநேரந்தான் ஆயிற்று என்றான்.

ரூத் 2:8 அப்பொழுது போவாஸ் ரூத்தைப் பார்த்து: மகளே, கேள்; பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும், இவ்விடத்தைவிட்டுப் போகாமலும், இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடுகூடவே இரு.

2 அதிகாரம்

ரூத் 2:9 அவர்கள் அறுப்பறுக்கும் வயலை நீ பார்த்து, அவர்கள் பிறகே போ; ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு, வேலைக்காரருக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்; உனக்குத் தாகம் எடுத்தால், தண்ணீர்க் குடங்களண்டைக்குப் போய், வேலைக்காரர் மொண்டுகொண்டு வருகிறதிலே குடிக்கலாம் என்றான்.

ரூத் 2:10 அப்பொழுது அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: நான் அந்நியதேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயைகிடைத்தது என்றாள்.

ரூத் 2:11 அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக: உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜன்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப் பட்டது.

ரூத் 2:12 உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்.

ரூத் 2:13 அதற்கு அவள்: என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்கவேண்டும்; நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும், நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உம்முடைய அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே என்றாள்.

ரூத் 2:14 பின்னும் போவாஸ் சாப்பாட்டு வேளையில் அவளைப் பார்த்து: நீ இங்கே வந்து, இந்த அப்பத்திலே புசித்து, காடியிலே உன் துணிக்கையைத் தோய்த்துக் கொள் என்றான். அப்படியே அவள் அறுப்பறுக்கிறவர்கள் அருகே உட்கார்ந்தாள்; அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தான்; அவள் சாப்பிட்டு, திர்ப்தியடைந்து, மீந்ததை வைத்துக் கொண்டாள்.

"போவாஸ்" **(Boaz)** - இவன் ஒரு ஐசுவரியவான். யூதா கோத்திரத்தான். இயேசு கிறிஸ்துவின் வம்சவழியில் இவனுடைய பெயரும் இடம் பெற்றிருக்கிறது ரூத்தின் சரித்திரத்தில் இவனைப் பற்றி 19 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (ரூத் 2:1-23; ரூத் 3:2,7; ரூத் 4:1-21, 1நாளா 2:11-12) மறுபெயர் **"Booz"** (மத் 1:5; லூக்கா 3:32)

"கர்த்தர் உங்களோடே இருப்பாராக" - இஸ்ரவேலில் உள்ள தெய்வ பயமுள்ள மனுஷரும், அவர்களுடைய வேலைக்காரரும் இவ்வாறு ஒருவரையொருவர் வாழ்த்திக் கொள்வார்கள். தன்னுடைய வேலைக்காரரோடே கர்த்தருடைய பிரசன்னமும், பாதுகாப்பும் இருக்க வேண்டும் என்று எஜமான் வாழ்த்துவார். தங்களுடைய எஜமான்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று வேலைக்காரர்கள் வாழ்த்துவார்கள். எஜமானுக்கு அதிக விளைச்சலைக் கொடுக்க வேண்டுமென்றும், தன்னுடைய ஐசுவரியத்தைத் தேவநாம மகிமைக்காகப் பயன்படுத்தும் ஞானத்தைத் தங்கள் எஜமானுக்குக் கர்த்தர் கொடுக்க வேண்டுமென்றும் வேலைக்காரர்கள் கர்த்தரிடத்தில் ஜெபிப்பார்கள். எஜமான்களும், வேலைக்காரரும் ஒருவருக்கொருவர் அன்பாயிருந்து, மனப்பூர்வமாய் வாழ்த்திக் கொள்வதினால் அவர்களுக்குள் சந்தோஷமும், சமாதானமும் நிலவிற்று. (சங் 129:6-8).

"அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக வைக்கப்பட்ட தன் வேலைக்காரன்" - இவன் வேலைக்காரர்களுக்குக் கண்காணி. அதாவது உக்கிராணக்காரன். (லூக்கா 16:1-12)

ரூத் - தொகுப்புரை

2 அதிகாரம்

"இவள் மோவாப் தேசத்திலிருந்து நகோமியோடே கூட வந்த மோவாபிய பெண்பிள்ளை" - கண்காணியும், கதிர் அறுக்கிறவர்களும் ரூத்தைப் பற்றி ஏற்கெனவே தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவள் கண்காணியிடம் "அறுக்கிறவர்கள் பிறகே அரிக்கட்டுகளிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக் கொள்ளுகிறேன்" என்று ஏற்கெனவே அனுமதி பெற்றிருக்கிறார்கள். (ரூத் 2:7). போவாசும், ரூத்தும் சந்தித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக இது நகோமி செய்த திட்டமாக இருக்கலாம். இதன் மூலமாக உறவின்முறை மீட்பின் பிரமாணம் இங்கு அமுலாக்கப்படும். போவாஸ் ரூத்தைப் பற்றியும், அவள் நகோமியிடமும், அவளுடைய ஜனத்தாரிடமும், கர்த்தரிடமும் அன்பாயிருக்கிறதைப் பற்றியும் கேள்விப் பட்டிருக்கிறான். (ரூத் 2:11).

"அவள் குடிசைக்கு வந்து கொஞ்சநேரந்தான் ஆயிற்று" - அறுக்கிறவர்கள் மதிய உணவு வேளைக்குப்பின்பு, சிறிது நேரம் ஒய்வெடுப்பார்கள். ரூத்தும் அவர்களோடு ஒய்வெடுத்திருக்கலாம்.

போவாஸ் ரூத்திற்குக் கூறிய காரியங்கள்

1. மகளே, கேள்.
2. பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும், இவ்விடத்தைவிட்டுப் போகாமலும் இரு.
3. இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடுகூடவே இரு.
4. அவர்கள் அறுப்பறுக்கும் வயலை நீ பார்த்து, அவர்கள் பிறகே போ.
5. ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு, வேலைக்காரருக்குக் கட்டளை யிட்டிருக்கிறேன். ஆகையினால் அவர்களைக் கண்டு பயப்படாதே.
6. உனக்குத் தாகம் எடுத்தால், தண்ணீர்க்குடங்களண்டைக்குப் போய், வேலைக்காரர் மொண்டுகொண்டு வருகிறதிலே குடிக்கலாம்.

"ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு" - இஸ்ரவேலின் வாலிபரும், மற்ற தேசத்து வாலிபர்களைப்போலவே இருந்திருக்க வேண்டும். அந்நிய தேசத்து ஸ்திரீயான ரூத்திற்கு அவர்கள் மூலமாக ஏதாவது பிரச்சனை வரலாம் என்று போவாஸ் எதிர்பார்த்து இவ்வாறு கட்டளையிட்டிருக்க வேண்டும்.

"அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி" - இஸ்ரவேல் தேசத்தில் வயதில் சிறியவர்கள் பெரியவர்களுக்கு முன்பாகவும், அதிகாரத்தில் குறைவுள்ளவர்கள் மேலான அதிகாரிகளுக்கு முன்பாகவும் இவ்வாறு மரியாதை பண்ணுவது வழக்கம்.

"எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப் பட்டது" - ரூத்தைப் பற்றிய எல்லா விவரமும் போவாசிற்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆகையினால் போவாஸ் ரூத்திற்கு "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக" என்று கூறி, அவளை ஆசீர்வதிக்கிறான். (ரூத் 2:12). கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வருவது என்பதற்கு கர்த்தரை நம்பி வருதல் என்று பொருள். இந்த வாக்கியம் ரூத் கர்த்தரோடு மெய்யான ஐக்கியத்திலிருப்பதைத் தெளிவுபடுத்துகிறது.

அடைக்கலம் (to trust) - חָסָה - khaw-saw' - 2620

வினைச்சொல் - நம்பு, நம்பியிரு, அண்டிக்கொள், ஒதுங்கு, வந்துஅடை, அடைக்கலம்புகு (flee for refuge)

ஆறுதல் சொல்லுதல் (comforted me) - נָחַם - naw-kham' – 5162

2 அதிகாரம்

வினைச்சொல் - மனஸ்தாபமாயிரு, மனஸ்தாபப்படு, ஆறுதல்அடை, மனம்மாறு, தேற்றப்படு, பொறு, பரிதாபங்கொள், பரிதபி, துக்கம், ஆறு, மனமடி, பிரியப்படு, தேற்று, ஆறுதல்செய், ஆறுதல் சொல்லு, தேற்றரவாயிரு, தேற்றரவுபண்ணு, ஆற்று, ஆறுதலாகஇரு, தேற்றரவு, பரிதாபப்படு **(to sigh; to pity, console, or comfort by speaking kind and endearing words)** (ரூத் 2:13; 2சாமு 12:24; ஏசா 49:13; ஏசா 52:9; ஏசா 66:13).

பட்சமாய் (friendly) - לֵב - labe - 3820

ஆண்பால் பெயர்ச்சொல்-இருதயம், மனது, உள்ளம், மதி, புத்தி, நெஞ்சம், சித்தம், சிந்தை, சிந்தனை, ஞானம் **(the heart)** - போவாஸ் ரூத்தின் இருதயத்தில் பதியும்படியாகப் பேசினான். இதே வார்த்தை நியா 19:3 ஆவது வசனத்தில் லேவியன் தன் மறுமனையாட்டியோடு பேசியதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. போவாஸ் ரூத்தை தன்னோடும், அறுப்பறுக்கிற வர்களோடும் போஜனம் பண்ணுமாறு அழைத்தான். தன் சொந்தக் கையினால் அவளுக்கு வறுத்தக் கோதுமையைக் கொடுத்தான். இவையெல்லாம் போவாஸ் ரூத்திடம் பட்சமாய் இருந்ததற்குச் சான்றுகளாகும். (ரூத் 2:14)

காடி (vinegar) - חֹמֶץ - kho'-mets - **2558**

ஆ.பெ.சொ.-காடி **(sour wine)** (சங் 69:21; நீதி 10:26; நீதி 25:20) - நசரேயர் காடியைத் தங்கள் போஜனத்தில் பயன்படுத்தக்கூடாது.

4. ரூத் அரிக்கட்டுகள் நடுவிலே கதிர்பொறுக்கிக் கொள்ளலாம்

ரூத் 2:15 அவள் கதிர் பொறுக்கிக் கொள்ள எழுந்தபோது போவாஸ் தன் வேலைக்காரரை நோக்கி: அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக் கொள்ளட்டும்; அவளை ஈனம் பண்ணவேண்டாம்.

ரூத் 2:16 அவள் பொறுக்கிக்கொள்ளும் படிக்கு அவளுக்காக அரிகளிலே சிலதைச் சிந்தவிடுங்கள், அவளை அதட்டாதிருங்கள் என்று கட்டளையிட்டான்.

ரூத் 2:17 அப்படியே அவள் சாயங்கால மட்டும் வயலிலே கதிர் பொறுக்கினாள்; பொறுக்கினதை அவள் தட்டி அடித்துத் தீர்ந்தபோது, அது ஏறக்குறைய ஒரு மரக்கால் வாற்கோதுமை கண்டது.

ரூத் 2:18 அவள் அதை எடுத்துக் கொண்டு, ஊருக்குள் வந்தாள்; அவள் பொறுக்கினதை அவளுடைய மாமி பார்த்தாள்; தான் திருப்தியாய்ச் சாப்பிட்டு மீதியாக வைத்ததையும் எடுத்து அவளுக்குக் கொடுத்தாள்.

"அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக் கொள்ளட்டும்" - இது ரூத்திற்குக் காண்பிக்கப் படும் விசேஷித்த சிலாக்கியம். அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக் கொள்வதற்குப் பொதுவாக யாருக்கும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. அவர்கள் வயல் ஓரங்களில் கீழே சிந்தியிருப்பதை மட்டுமே பொறுக்க வேண்டும். இங்கு போவாஸ் ரூத்திற்கு விசேஷித்த சலுகையைக் காண்பிக்கிறான். அவளை யாரும் அதட்டக் கூடாது என்றும் கட்டளையிட்டிருக்கிறான். (ரூத் 2:15-16)

"பொறுக்கினதை அவள் தட்டி அடித்துத் தீர்ந்தபோது" - தானியக்கதிர்களிலிருந்து தானியத்தைப் பிரித்தெடுக்கும் பழங்கால முறை. கதிர்கள்மீது கம்பால் அடித்தோ, அல்லது கதிர்களைக் கல்லின்மீது அடித்தோ தானியத்தைப் பிரித்தெடுப்பது அக்காலத்து வழக்கம்.

ரூத் - தொகுப்புரை

2 அதிகாரம்

"தான் திருப்தியாய்ச் சாப்பிட்டு மீதியாக வைத்ததையும் எடுத்து அவளுக்குக் கொடுத்தாள்" - மதிய உணவுவேளையின்போது போவாஸ் ரூத்திற்கு போஜனம் கொடுத்தான். அதில் ஒரு பகுதியை ரூத் நகோமிக்காக எடுத்து வைத்து அதை அவளிடம் வந்து கொடுக்கிறாள். நகோமியின்மீது ரூத் மிகுந்த கரிசனையோடு இருப்பதை இது தெளிவுபடுத்துகிறது.

5. நகோமியின் ஆலோசனை

ரூத் 2:19 அப்பொழுது அவளுடைய மாமி: இன்று எங்கே கதிர்பொறுக்கினாய், எவ்விடத்தில் வேலைசெய்தாய் என்று அவளிடத்தில் கேட்டு; உன்னை விசாரித்தவன் ஆசீர்வதிக்கப்படுவானாக என்றாள்; அப்பொழுது அவள்: இன்னாரிடத்திலே வேலை செய்தேன் என்று தன் மாமிக்கு அறிவித்து: நான் இன்று வேலைசெய்த வயல்காரன் பேர் போவாஸ் என்றாள்.

ரூத் 2:20 அப்பொழுது நகோமி தன் மருமகளைப் பார்த்து: உயிரோடிருக் கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் தயவு செய்கிற கர்த்தராலே அவன் ஆசீர்வதிக்கப் படுவானாக என்றாள்; பின்னும் நகோமி அவளைப் பார்த்து: அந்த மனுஷன் நமக்கு நெருங்கின உறவின்முறையானும் நம்மை ஆதரிக்கிற சுதந்தரவாளிகளில் ஒருவனுமாய் இருக்கிறான் என்றாள்.

ரூத் 2:21 பின்னும் மோவாபிய ஸ்திரீயான ரூத்: அவன் என்னை நோக்கி, என் அறுப்பெல்லாம் அறுத்துத் தீருமட்டும், நீ என் வேலைக்காரிகளோடே கூடவே இரு என்று சொன்னார் என்றாள்.

ரூத் 2:22 அப்பொழுது நகோமி தன் மருமகளாகிய ரூத்தைப் பார்த்து: என் மகளே, வேறொரு வயலிலே மனுஷர் உன்னை எதிர்க்காதபடிக்கு நீ அவன் வேலைக்காரிகளோடே போகிறது நல்லது என்றாள்.

"கர்த்தராலே அவன் ஆசீர்வதிக்கப் படுவானாக" - நகோமிக்கு இஸ்ரவேல் புத்திரரின் பழக்கவழக்கங்கள் நன்றாகத் தெரியும். போவாஸ் செய்த எல்லாக் காரியங்களும் அவன் ரூத்தின்மீது அன்பாயிருக்கிறான் என்பதற்கு அடையாளம். ரூத்திற்கும் போவாசுக்கும் இடையே நெருங்கிய உறவு உள்ளது. போவாஸ் ரூத்தை உறவின்முறை மீட்பு பிரமாணத்தின் பிரகாரம் மீட்டுக்கொள்ள வேண்டுமென்று நகோமி விரும்புகிறாள்.

"நீ அவன் வேலைக்காரிகளோடே போகிறது நல்லது" - மற்றவர்கள் வயலில் போகாமல் போவாசின் வயலுக்குப்போய் கதிர் பொறுக்குமாறு நகோமி தன் மருமகளுக்குக் கூறுகிறாள். இந்த அறுப்புக்காலம் முழுவதிலும் ரூத் வேறு யாருடைய வயலுக்கும் போய், கதிர் பொறுக்கவில்லை. (ரூத் 2:21-22).

6. ரூத் போவாசுடைய வேலைக் காரிகளோடே கூடியிருக்கிறாள்

ரூத் 2:23 அப்படியே கோதுமை அறுப்பும் வாற்கோதுமை அறுப்பும் தீருமட்டும் அவள் கதிர் பொறுக்கும்படிக்கு, போவாசுடைய வேலைக்காரிகளோடே கூடியிருந்து, தன் மாமியினிடத்தில் தங்கினாள்.

"கோதுமை அறுப்பு" - கோதுமை அறுப்பு பெந்தெகொஸ்தே பண்டிகையின் போது நடைபெறும் சம்பவம். அறுப்புக்காலங்களில் இஸ்ரவேல் ஜனங்கள் ரூத்தின் சரித்திரத்தை வாசிப்பதைவழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

இஸ்ரவேலில் அறுப்புக்காலம்

இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் அறுப்புக்காலங்கள் மிகவும் முக்கியமானவை ஆகும். முக்கியமான நிகழ்ச்சிகளெல்லாம் அறுப்புக் காலங்களிலேயே நடைபெற்றன. (ரூத் 1:22; ரூத் 2:23; ஆதி 30:14; யோசு 3:15; நியா 15:1; 1சாமு 6:13; 2சாமு 21:9; 2சாமு 23:13). இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் வருஷத்திற்கு மூன்றுமுறை பண்டிகை ஆசரிக்கக் கூடிவரவேண்டும். இது இஸ்ரவேலின் மூன்று அறுப்புக்காலங்களில் நடைபெறுகிறது. (யாத் 23:16; யாத் 34:21-22).

ரூத் - தொகுப்புரை

2 அதிகாரம்

1. பஸ்கா பண்டிகை - வாற்கோதுமை அறுப்புக்காலம். (ரூத் 1:22; ரூத் 2:17,23; லேவி 23:4-15).
2. பெந்தெகொஸ்தே பண்டிகை - கோதுமை அறுப்புக்காலம் (யாத் 34:22; லேவி 23:15-22).
3. கூடாரங்களின் பண்டிகை - பழங்களின் பறிப்புக்காலம் எக்காளங்களின் பண்டிகையும், பாவநிவாரண நாளும் கூடாரங்களின் பண்டிகைக்கு முந்தி வரும். ஆகையினால் இந்தப் பண்டிகைக்கு வரும் இஸ்ரவேல் புத்திரர் மூன்று பண்டிகைகளிலும் கலந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். (லேவி 23:23-44).

வாற்கோதுமை அறுப்புக்காலத்திற்கும், கோதுமை அறுப்புக்காலத்திற்கும் இடையில் மற்ற தானியங்களெல்லாம் அறுவடை செய்யப்படும். இந்தக் காலத்தில் பொதுவாக மழை பெய்யும். கோதுமை அறுப்புக் காலத்திலிருந்து பழங்களின் பறிப்புக்காலம் வரையிலும் பொதுவாக மழை பெய்யாது. (2சாமு 21:10; எரே 5:24). அறுவடை காலத்தில் அறுவடை செய்கிறவர்கள் குளிர்ச்சியான காலத்தை எதிர்பார்த்திருப்பார்கள். (நீதி 25:13).

3 அதிகாரம்

7. போவாஸ் ரூத்தின் உறவின் முறையான்

ரூத் 3:1 பின்பு அவள் மாமியாகிய நகோமி அவளை நோக்கி: என் மகளே, நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி நான் உனக்குச் சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ?

ரூத் 3:2 நீ போவாசின் வேலைக்காரிகளோடே கூடியிருந்தாயே, அவன் நம்முடைய உறவின்முறையான் அல்லவா? இதோ, அவன் இன்று இராத்திரி களத்திலே வாற்கோதுமை தூற்றுவான்.

"நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி நான் உனக்குச் சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ?" - ரூத்தை போவாசிற்கு விவாகம் செய்து வைக்க வேண்டும். இது நகோமியின் திட்டம். உறவின்முறை மீட்புப் பிரமாணத்தின் பிரகாரம் இந்த விவாகத்தை நடத்தி வைக்க வேண்டுமென்று நகோமி விரும்புகிறாள். இந்தப் பிரமாணத்தின்படி ஒரு சுதந்தரத்தை மீட்கிறவன் மரித்துப்போன சகோதரனுடைய மனைவியையும் விவாகம் செய்ய வேண்டும். அந்தக் குடும்பத்தின் பெயர் நிலைத்திருப்பதற்காக அவளுக்கு பிள்ளைகளையும் வளர்த்துத் தரவேண்டும். நகோமி தன் திட்டத்தை ரூத்திற்கு அறிவிக்கிறாள்.

"அவன் இன்று இராத்திரி களத்திலே வாற்கோதுமை தூற்றுவான்." - வாற்கோதுமையை இரவு வேளையில் தூற்றுவது வழக்கம். அப்போது குளிர்ச்சியாகவும் இருக்கும். காற்று பலமாகவும் வீசும். இதுபோன்ற சீதோஷ்ண நிலையில் வேலைக்காரர்களால் நன்றாக வேலைபார்க்க முடியும். (ஏசா 30:28; ஆமோ 9:9; மத் 3:12; லூக்கா 22:31, லூக்கா 3:17)

8. நகோமியின் ஆலோசனை

ரூத் 3:3 நீ குளித்து, எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தக் களத்திற்குப் போ; அந்த மனுஷன் புசித்துக் குடித்துத் தீருமட்டும் அவன் கண்ணுக்கு எதிர்ப்படாமலிரு.

ரூத் 3:4 அவன் படுத்துக்கொண்டபோது, அவன் படுத்திருக்கும் இடத்தை நீ பார்த்திருந்து போய், அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கி நீ படுத்துக்கொள்; அப்பொழுது நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான் என்றாள்.

நகோமி ரூத்திற்குக் கூறிய ஆலோசனைகள்

1. நீ குளித்துக்கொள். (ரூத் 3:3).
2. எண்ணெய் பூசிக்கொள்.
3. உன் வஸ்திரங்களை உடுத்திக்கொள்
4. அந்தக் களத்திற்குப் போ
5. அந்த மனுஷன் புசித்துக் குடித்துத் தீருமட்டும் அவன் கண்ணுக்கு எதிர்ப்படாமலிரு.
6. அவன் படுத்துக்கொண்டபோது, அவன் படுத்திருக்கும் இடத்தை நீ பார்த்திருந்து அங்கு போ. (ரூத் 3:4).
7. அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கு.
8. அவன் கால்களின் அருகில் படுத்துக் கொள்.
9. நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான். அதைக் கவனமாகக் கேள்.

3 அதிகாரம்

9. ரூத் நகோமிக்குக் கீழ்ப்படிகிறாள்

ரூத் 3:5 அதற்கு அவள்: நீர் எனக்குச் சொன்னபடியெல்லாம் செய்வேன் என்றாள்.

ரூத் 3:6 அவள் களத்திற்குப்போய், தன் மாமி தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தாள்.

ரூத் 3:7 போவாஸ் புசித்துக் குடித்து, மகிழ்ச்சியாயிருந்து, ஒரு அம்பாரத்து அடியிலே வந்து படுத்துக்கொண்டான். அப்பொழுது அவள்: மெள்ளப்போய், அவன் கால்களின் மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கிப் படுத்துக் கொண்டாள்.

ரூத் 3:8 பாதிராத்திரியிலே, அந்த மனுஷன் அருண்டு, திரும்பி ஒரு ஸ்திரீ தன் பாதத்தண்டையிலே படுத்திருக்கிறதைக் கண்டு,

ரூத் 3:9 நீ யார் என்று கேட்டான்; அவள், நான் உம்முடைய அடியாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி என்றாள்.

"நீர் எனக்குச் சொன்னபடியெல்லாம் செய்வேன்" - நகோமி சொன்னபடி செய்வதாக ரூத் வாக்குப்பண்ணுகிறாள். (ரூத் 3:5-18).

"ஒரு அம்பாரத்து அடியிலே வந்து படுத்துக் கொண்டான்" - வாற்கோதுமையை போரடிக்கும் களத்தில் சில சமயங்களில் கள்ளர்கள் வந்து தானியங்களைத் திருடிச் செல்வார்கள். ஆகையினால் வாற்கோதுமையையும், கோதுமையையும் களத்தில் ஒரு குவியலாகக் குவித்து வைப்பார்கள். அதற்கு அம்பாரம் என்று பெயர். அதற்குக் காவலாக வேலையாட்கள் அவற்றின் அருகில் படுத்துக் கொள்வது வழக்கம். (மத் 3:12).

"அவன் கால்களின் மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கிப் படுத்துக் கொண்டாள்" - ரூத் தன்னுடைய தாழ்மையை வெளிப் படுத்துகிறாள். ரூத் போவாசின் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கிப் படுத்துக் கொள்ள வேண்டும். அவள் தன் அருகில் படுத்திருப்பது போவாசிற்குத் தெரிய வரும். போவாசைப் பற்றி நகோமி நன்றாக அறிந்திருக்கிறாள். ஆகையினால் ரூத்திற்கு போவாசால் எந்த ஒரு தீங்கும் வராது என்பதில் நம்பிக்கையாய் இருக்கிறாள். போவாஸ் உறவின்முறை மீட்பைப் பயன்படுத்தி ரூத்தை மீட்டுக் கொள்ள வேண்டும். இதற்காக நகோமி ஒவ்வொரு காரியமாகத் திட்டமிட்டுச் செய்கிறாள்.

"அந்த மனுஷன் அருண்டு" - ஒரு ஸ்திரீ தன் பாதத்தண்டையிலே படுத்திருக்கிறதைக் கண்டு போவாஸ் பயப்படுகிறான். அவள் யார் என்பதும், ஏன் அங்கு படுத்திருக்கிறாள் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. (ரூத் 3:9).

"நான் உம்முடைய அடியாளாகிய ரூத்" - ரூத் தன்னைப் பற்றி வெளிப்படுத்துகிறாள். போவாஸ் ரூத்தின் சுதந்தரவாளி. அவனுக்குத் தன் சுதந்தரவாளிக்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கு உரிமை இருந்தும், அவன் அதை இதுவரையிலும் நிறைவேற்றவில்லை. (உபா 25:5-10).

"நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி" - ரூத்தைப் போவாஸ் தன்னுடைய பாதுகாப்பில் எடுத்துக்கொண்டு அவளை விவாகம் செய்ய வேண்டுமென்பதற்கு இது அடையாளம். யூதமார்க்கத்து விவாகச் சடங்குகளின்படி புருஷன் தன்னுடைய வஸ்திரத்தைத் தன் மனைவியின்மீது விரித்து அவளுடைய தலையை அந்த வஸ்திரத்தினால் மூடுவான்.

III. உறவின்முறை மீட்பின் நிறைவேற்றம் - (லேவி 25:25-34; எண் 13:1-11)

ரூத் - தொகுப்புரை

3 அதிகாரம்

1. பட்டணத்து மூப்பரோடு ஆலோசனை

ரூத் 3:10 அதற்கு அவன்: மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப்பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது.

ரூத் 3:11 இப்போதும் மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்.

ரூத் 3:12 நான் சுதந்தரவாளி என்பது மெய்தான்; ஆனாலும் என்னிலும் கிட்டின சுதந்தரவாளி ஒருவன் இருக்கிறான்.

"மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக" - போவாஸ் ரூத்தை ஆசீர்வதிக்கிறான். தன்னுடைய சுதந்தரவாளியின் உரிமையைப் புரிந்து கொள்கிறான். உறவின்முறை மீட்பின் பிரகாரம் தான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய முன் வருகிறான்.

"நீ தரித்திரரும் ஐசுவரியான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால்" - போவாஸ் வயதானவன். ரூத் வாலிபரின் பின்னே போகாமல், வயதான போவாசை விரும்பி வருகிறாள். இதன் மூலமாக ரூத்தின் நற்குணம் போவாசின் பார்வைக்கு உத்தமமாய் இருக்கிறது. (ரூத் 3:11-18).

"உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன்" - போவாஸ் தன்னுடைய உறவின் முறை மீட்பின் கடமையை நிறைவேற்றுவதாக வாக்குப் பண்ணுகிறான். இந்தக் கடமையை ஏற்கெனவே போவாஸ் நிறைவேற்றாதே போனதினால் அவனுக்குள் குற்ற உணர்வுஉண்டாகிறது. (உபா 25:5-10).

"நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்" - பெத்லகேமிலுள்ள எல்லா ஜனங்களும் ரூத் ஒரு குணசாலி என்பதை அறிந்திருக்கிறார்கள். யூதர்கள் மத்தியில் ஒரு ஸ்திரீ தன் இளவயதில் விதவையாக நிலைத்திருப்பதே அவள் ஒரு குணசாலி என்பதற்கு அடையாளமாகும். வாலிபர்களும், ஐசுவரியவான்களும் அவளை விவாகம் செய்ய விரும்பியிருப்பார்கள். (ரூத் 3:10) ஆனால் ரூத் அவர்களை விவாகம் பண்ண விரும்பவில்லை. சுதந்தரவாளியான போவாஸ் தன்னை விவாகம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாள். ஆனால் ரூத்திற்கு போவாசைவிட கிட்டின சுதந்தரவாளி ஒருவன் இருக்கிறான். ரூத்தை விவாகம் செய்யும் முன்னுரிமை அவனுக்கு மட்டுமே இருக்கிறது. அவன் திருமணம் செய்யாமற் போனால் மட்டுமே, போவாசிற்கு ரூத்தைத் திருமணம் செய்யும் முறை வரும். (ரூத் 3:12-18).

"சுதந்தரவாளி" **(kinsman)** - ஒருவனுடைய நெருங்கிய உறவினன். ஒருவன் மரித்துப் போகும்போது, அவனுடைய சுதந்தரங்களைக் கிரயத்திற்கு வாங்க உரிமையுள்ளவன். அந்த சுதந்தரவாளி இறந்தவனுடைய விதவையையும் திருமணம் செய்து கொள்ள வேண்டும். (ரூத் 2:20; ரூத் 3:9-13; ரூத் 4:1-14; எண் 5:8; 1இராஜா 16:11). மரித்துப்போன உறவினனுக்காக பழிவாங்கும் பொறுப்பையும் சுதந்தரவாளி ஏற்றுக் கொள்ள வேண்டும். (எண் 35:12; உபா 19:6,12; யோசு 20:3-9). தங்களுடைய வறுமையின்நிமித்தம் எபிரெயர்கள் தங்களுடைய சுதந்தரத்தை விற்றுப்போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அவனுடைய சுதந்தரவாளி அதை அவனுக்காக மீட்க வேண்டும். அவனுக்கு உறவின்முறைமீட்பன்**(kinsman redeemer)** என்று பெயர். (லேவி 25:25). மரித்துப்போனவன் புத்திர சந்தானம் அற்றவனாக மரித்துப் போனால், அவனுடைய விதவை மனைவியையும் சுதந்தரவாளி விவாகம் பண்ணி, அவனுடைய குடும்பத்திற்கு வாரிசும் உண்டாக்கித் தரவேண்டும். அவனுடைய சுதந்தரத்தை மீட்டுக் கொள்ள சுதந்தரவாளிக்கு விருப்பம் இல்லையென்றால், அவனுடைய விதவை மனைவியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய நிர்பந்தம் அவனுக்கு இல்லை. இங்கு ரூத்திற்கு போவாசைவிட கிட்டின சுதந்தரவாளி ஒருவன் இருக்கிறான். அவன் ரூத்தை விவாகம் பண்ண மறுத்தால் மட்டுமே அவளைத் திருமணம் செய்துகொள்ளும் உரிமை போவாசிற்கு வரும்.

3 அதிகாரம்

சுதந்தரவாளி (kinsman) - גְּאָלִים - gaw-al' - 1350

பெயர்ச்சொல் - மீட்பு, மீளு, சுதந்தரமாயிரு, தப்பு, உறவினனாயிரு, சுதந்தரவாளி

10. போவாஸின் பதட்டம்

ரூத் 3:13 இராத்திரிக்குத் தங்கியிரு; நாளைக்கு அவன் உன்னைச் சுதந்தர முறையாய் விவாகம் பண்ணச் சம்மதித்தால் நல்லது, அவன் விவாகம் பண்ணட்டும்; அவன் உன்னை விவாகம் பண்ண மனதில்லாதிருந்தானேயாகில், நான் உன்னைச் சுதந்தரமுறையாய் விவாகம் பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ஆணையிடுகிறேன்; விடியற்காலமட்டும் படுத்துக் கொண்டிரு என்றான்.

ரூத் 3:14 அவள் விடியற்காலமட்டும் அவன் பாதத்தண்டையில் படுத்திருந்து, களத்திலே ஒரு ஸ்திரீ வந்ததாக ஒருவருக்கும் தெரிவிக்க வேண்டாம் என்று அவன் சொல்லி யிருந்தபடியால், ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாததற்கு முன்னே எழுந்திருந்தாள்.

11. நீர் சுதந்தரவாளி

ரூத் 3:15 அவன் அவளை நோக்கி: நீ போர்த்துக்கொண்டிருக்கிற போர்வையை விரித்துப்பிடி என்றான்; அவள் அதைப்பிடித்தபோது, அவன் அதிலே ஆறுபடி வாற்கோதுமையை அளந்து போட்டு, அவள்மேல் தூக்கிவிட்டு, பட்டணத்திற்குப் புறப்பட்டுவந்தான்.

ரூத் 3:16 அவள் தன் மாமியினிடத்தில் வந்தபோது, அவள்: என் மகளே, உன் செய்தி என்ன என்று கேட்டாள்; அப்பொழுது அவள்: அந்த மனுஷன் தனக்குச் செய்ததையெல்லாம் அவளுக்கு விவரித்தாள்.

ரூத் 3:17 மேலும் அவர், நீ உன் மாமியாரண்டைக்கு வெறுமையாய்ப் போக வேண்டாம் என்று சொல்லி, இந்த ஆறுபடி வாற்கோதுமையை எனக்குக் கொடுத்தார் என்றாள்.

ரூத் 3:18 அப்பொழுது அவள்: என் மகளே, இந்தக் காரியம் என்னமாய் முடியும் என்று நீ அறியுமட்டும் பொறுத்திரு; அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாற மாட்டான் என்றாள்.

போர்வை (vail) - מִטְפַּחַת - mit-pakh'-ath - 4304

பெ.பெ.சொ.-போர்வை "wimples" (ஏசா 3:22) முகத்தை மூடும் வஸ்திரம். (உன் 5:7; ஏசா 3:23; ஆதி 24:65; ஆதி 38:14,19).

4 அதிகாரம்

12. ரூத்துக்கு ஆசீர்வாதமான வார்த்தை

ரூத் 4:1 போவாஸ் பட்டணவாசலில் போய், உட்கார்ந்துகொண்டிருந்தான்; அப்பொழுது போவாஸ் சொல்லியிருந்த அந்தச் சுதந்தரவாளி அந்த வழியே வந்தான்; அவனை நோக்கி: ஓய், என்று பேர் சொல்லிக் கூப்பிட்டு, இங்கே வந்து சற்று உட்காரும் என்றான்; அவன் வந்து உட்கார்ந்தான்.

ரூத் 4:2 அப்பொழுது அவன் பட்டணத்து மூப்பரானவர்களில் பத்துப்பேரை அழைத்து, இங்கே உட்காருங்கள் என்றான்; அவர்களும் உட்கார்ந்தார்கள்.

ரூத் 4:3 அப்பொழுது அவன் அந்தச் சுதந்தரவாளியை நோக்கி: எலிமெலேக் என்னும் நம்முடைய சகோதரனுக்கு இருந்த வயல்நிலத்தின் பங்கை, மோவாப் தேசத்திலிருந்து திரும்பி வந்த நகோமி விற்கப்போகிறாள்.

ரூத் 4:4 ஆகையால் நீர் அதை ஊராருக்கு முன்பாகவும், என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும் வாங்கிக் கொள்ளும்படி உமக்கு அறியப் பண்ணவேண்டும் என்றிருந்தேன்; நீர் அதைச் சுதந்தரமுறையாக மீட்டுக் கொள்ள மனதிருந்தால், மீட்டுக் கொள்ளும்; அதை மீட்டுக்கொள்ள மனதில்லாதிருந்தால், நான் அதை அறியும்படிக்கு எனக்குச் சொல்லும்; உம்மையும் உமக்குப்பின்பு என்னையும் தவிர, அதை மீட்கத்தக்கவன் வேறொருவனும் இல்லை என்றான்; அதற்கு அவன்: நான் அதை மீட்டுக்கொள்ளுகிறேன் என்றான்.

ரூத் 4:5 அப்பொழுது போவாஸ்: நீர் நகோமியின் கையிலே அந்த வயல்நிலத்தை வாங்குகிற நாளிலே மரித்தவனுடைய சுதந்தரத்தில் அவன் பேரை நிலைநிற்கப்பண்ணும்படிக்கு, அதை மரித்தவன் மனைவியாகிய மோவாபிய ஸ்திரீயான ரூத் கையிலும் வாங்கவேண்டியது என்றான்.

ரூத் 4:6 அப்பொழுது அந்தச் சுதந்தரவாளி: நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக் கொள்ளமாட்டேன்; நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக்கொள்ளும்; நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன் என்றான்.

ரூத் 4:7 மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு, இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால், ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுப்பான், இது இஸ்ரவேலிலே வழங்கின உறுதிப்பாடு.

“போவாஸ் பட்டணவாசலில் போய், உட்கார்ந்துகொண்டிருந்தான்” - பட்டண வாசலில் மூப்பர்கள் கூடிவந்து, அங்கு வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவது வழக்கம். அந்த இடத்தில் தன்னைவிட கிட்டின சுதந்தரவாளி அங்கு வரும்வரையிலும் போவாஸ் அமர்ந்திருந்தான்.

சுதந்தரவாளி மீட்பு செய்ய வேண்டிய முறை

1. சுதந்தரவாளிகளுக்குள் நடைபெறும் பேச்சுகளுக்குச் சாட்சியாக ஊரின் மூப்பர்களை அங்கு வரவழைக்க வேண்டும்.

2. யார் சுதந்தரவாளி என்பதை உறுதி பண்ணிக் கொள்ள வேண்டும் (ரூத் 4:3-6).

3. தன்னுடைய உரிமையை விட்டுக் கொடுக்கும் சுதந்தரவாளி தன் பாதரட்சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுக்க வேண்டும். இது சுதந்தரத்தை மீட்கிறதற்கும், மாற்றுகிறதற்கும் உறுதிப்படுத்தும் அடையாளமாகும். (ரூத் 4:7-8).

4 அதிகாரம்

4. சுதந்தரத்தை மீட்பது. (ரூத் 4:9).

5. சுதந்தரவாளிக்கும், மரித்துப் போனவனுடைய விதவைக்கும் விவாகம் நடைபெற வேண்டும். இதன் மூலமாக மரித்தவனுடைய சுதந்தரத்தில் அவன் பேர் அற்றுப்போகாமல், நிலைநிறுத்த வேண்டும். (ரூத் 4:10).

6. இதற்கு சாட்சியாக இருக்கும் மூப்பர்கள் தாங்கள் இதற்கு சாட்சிகள் என்று அறிக்கையிட வேண்டும். (ரூத் 4:11).

7. விவாகம் செய்து கொள்ளும் சுதந்தரவாளியையும் அவனுடைய மனைவியையும் வாழ்த்தவேண்டும்.

"பட்டணத்து மூப்பரானவர்களில் பத்துப்பேர்" - இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இருந்தால் போதுமானது. (எண் 35:30; உபா 17:6-7; உபா 19:15; மத் 18:16; மத் 26:60; 2கொரி 13:1; 1தீமோ 5:19; எபி 10:28). இயேசு கிறிஸ்துவின் உபதேசத்திற்கும், அவருடைய மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் பன்னிரண்டுபேர் சாட்சிகளாக இருந்தார்கள். (அப் 1:22; அப் 2:32; அப் 3:15; அப் 4:33; அப் 5:32; அப் 10:39,41). வரப்போகிற உபத்திரவக்காலத்தில் இரண்டு சாட்சிகள் மட்டுமே அனுப்பப்படுவார்கள். (வெளி 11:1-11).

"நான் அதை மீட்டுக்கொள்ளுகிறேன்" - போவாசைவிட கிட்டின சுதந்தரவாளி சுதந்தர முறையை மீட்டுக் கொள்ள விரும்புகிறான். ஆனால் இதை மீட்டுக் கொள்கிறவன் ரூத்தையும் விவாகம் செய்து கொள்ள வேண்டும். அதில் அவனுக்கு சம்மதமில்லை. (ரூத் 4:4-6) ஆகையினால் இந்தச் சுதந்தர முறையை மீட்டுக்கொள்ளும் உரிமை அடுத்த சுதந்தரவாளியாகிய போவாசிற்குக் கிடைக்கிறது.

"நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு" - ரூத்தின் சுதந்தரத்தை மீட்டுக் கொண்டால், போவாசைவிட கிட்டின சுதந்தரவாளியின் குடும்பத்தில் பிரச்சனை உண்டாகும். அவன் ரூத்தை விவாகம் செய்ய வேண்டும். அவனுடைய மனைவி இந்த விவாகத்தை ஏற்றுக் கொள்ளமாட்டாள். ஆகையினால் சுதந்தரத்தை மீட்டுக் கொள்ளும் உரிமையை அந்த சுதந்தரவாளி போவாசிற்குத் தருகிறான். போவாசும், அந்த சுதந்தரவாளியும் ஒரு ஒப்பந்தம் பண்ணிக் கொள்கிறார்கள். இதன் அடிப்படையில் போவாஸ் சுதந்தரத்தை மீட்டுக் கொண்டு, ரூத்தையும், திருமணம் செய்து கொள்கிறான். இதற்கு அந்தப் பட்டணத்து மூப்பர்கள் சாட்சிகளாக இருக்கிறார்கள். (ரூத் 4:6-7).

"மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு, இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம்" - ஒருவன் தன்னுடைய சுதந்தரத்தை மற்றவனுக்கு விட்டுக் கொடுக்கும்போது, அவன் தன் பாதரட்சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுக்க வேண்டும். இனிமேல் அந்தச் சுதந்தரம் அவனுக்கே உரியது என்பதற்கு இது அடையாளம். பாதரட்சை ஒருவனிடமிருந்து மற்றவனுக்கு மாறுவது அவனுடைய சொத்து அவனிடமிருந்து மற்றவனுக்கு மாறுவதற்கு அடையாளமாகும். இது இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம். (சங் 60:8; சங் 108:9).

2. போவாஸ் உறவின்முறை மீட்பை நிறைவேற்றுகிறார்

ரூத் 4:8 அப்படியே அந்தச் சுதந்தரவாளி போவாசை நோக்கி: நீர் அதை வாங்கிக்கொள்ளும் என்று சொல்லி, தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான்.

ரூத் 4:9 அப்பொழுது போவாஸ் மூப்பரையும் சகல ஜனங்களையும் நோக்கி: எலிமெலேக்குக்கு இருந்த எல்லாவற்றையும் கிலியோனுக்கும் மக்லோனுக்கும் இருந்த எல்லாவற்றையும் நகோமியின் கையிலே வாங்கிக் கொண்டேன் என்பதற்கு இன்றையதினம் நீங்கள் சாட்சி.

4 அதிகாரம்

ரூத் 4:10 இதுவுமல்லாமல், மரித்தவனுடைய சகோதரருக்குள்ளும், ஊராருக்குள்ளும், அவனுடைய பேர் அற்றுப்போகாமல், மரித்தவனுடைய சுதந்தரத்திலே அவன் பேரை நிலைநிறுத்த, நான் மக்லோனின் மனைவி யாயிருந்தமோவாபிய ஸ்திரீயான ரூத்தை எனக்கு மனைவியாகக் கொண்டேன்; அதற்கும் இன்றையதினம் நீங்கள் சாட்சி என்றான்.

"நீர் அதை வாங்கிக்கொள்ளும் என்று சொல்லி, தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான்" - அவர்களுடைய வழக்கு இதோடு முடிவு பெறுகிறது. அவன் தன் பாதரட்சையைக் கழற்றிப்போட்டதற்கு அந்த ஊரின் மூப்பர்கள் சாட்சிகளாக இருக்கிறார்கள். அவர்கள் போவாசையும், ரூத்தையும் ஆசீர்வதிக்கிறார்கள்.(ரூத்4:9-12).

"நகோமியின் கையிலே வாங்கிக் கொண்டேன்" - எலிமெலேக்குக்கு இருந்த எல்லாவற்றையும் கிலியோனுக்கும் மக்லோனுக்கும் இருந்த எல்லாவற்றையும் போவாஸ் நகோமியின் கையிலே வாங்கிக் கொண்டான். எலிமெலேக்கு பெத்லெகேமை விட்டு மோவாப் தேசத்திற்குப் போவதற்கு முன்பாக இவையனைத்தும் எலிமெலேக்கு பெத்லெகேமிலே வாங்கியவையாகும். (ரூத் 1:1). இப்பொழுது அவர்களுடைய நிலத்தைப் போவாஸ் மீட்டுக் கொண்டான். மோவாபிய ஸ்திரீயாகிய ரூத் போவாசின் மனைவியானாள்.தாவீதின்வம்சவரலாற்றிலும், மேசியாவின் வம்சவரலாற்றிலும் ரூத் இடம் பெற்றிருக்கிறாள். (ரூத் 4:9-10).

3. மூப்பர்களின் ஆசீர்வாதம்

ரூத் 4:11 அப்பொழுது ஒலிமுகவாசலில் இருக்கிற சகல ஜனங்களும் மூப்பரானவர்களும் அவனை நோக்கி: நாங்கள் சாட்சிதான்; உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டுபேராகிய ராகேலைப்போலவும் லேயாளைப்போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக, நீ எப்பிராத்தாவிலே பாக்கியவானாயிருந்து, பெத்லெகேமிலே புகழ்பெற்றிருக்கக் கடவாய்.

ரூத் 4:12 இந்தப் பெண்ணிடத்திலே கர்த்தர் உனக்கு அருளிச் செய்யப்போகிற சந்தானத்தினாலே உன் வீடு தாமார் யூதாவுக்குப் பெற்ற பேரேசின் வீட்டைப் போல ஆகக்கடவது என்றார்கள்.

"ஒலிமுகவாசலில் இருக்கிற சகல ஜனங்களும் மூப்பரானவர்களும்" - ஒலிமுக வாசலில் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணைக்கு ஊர் ஜனங்களும், மூப்பர்களும் வந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே போவாஸ் இந்தச் சுதந்தரத்தை மீட்டுக் கொண்டதற்கும், ரூத்தை திருமணம் செய்து கொண்டதற்கும் சாட்சிகளாக இருக்கிறார்கள்.

"உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர்........வாழ்ந்திருக்கச் செய்வாராக" - இந்த விவாகம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் நடைபெறுகிறது. இவர்கள் பெத்லெகேமிலே புகழ் பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்கள் மூலமாக வரும் சந்ததி ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும். பாரேசின் குடும்பத்தைப்போல ரூத்தின் குடும்பமும் புகழ் பெற்று விளங்கும். (ரூத் 4:11-12).

"ராகேலைப்போலவும் லேயாளைப்போலவும்" - (ஆதி 29:21-30:24; ஆதி 35:16-20)

"பெத்லெகேமிலே புகழ்பெற்றிருக்கக் கடவாய்" - ரூத் 4:11-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதம் பிற்காலத்தில் நிறைவேறுகிறது. தாவீதும், மேசியாவும் இவர்களுடைய சந்ததியில் வருகிறார்கள். (ஏசா 9:6-7; எரே 30:9; எசே 34:23-33; வெளி 11:15).

"பெத்லெகேம்" - இயேசு கிறிஸ்து இந்த ஊரில் பிறந்ததினால் பெத்லெகேம் புகழ் பெற்றது. (மீகா 5:1-2; மத் 2; லூக்கா 2).

"பேரேசின் வீட்டைப் போல ஆகக்கடவது" - பெத்லெகேம் புத்திரரும், எலிமெலேக்கும் பேரேசின் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். (ரூத் 4:18-22; ஆதி 38:28-30).

4 அதிகாரம்

4. உறவின்முறை மீட்பின் ஆசீர்வாதம்

ரூத் 4:13 போவாஸ் ரூத்தை விவாகம் பண்ணினான்; அவள் அவனுக்கு மனைவியானாள்; அவன் அவளிடத்தில் பிரவேசித்தபோது, அவள் கர்ப்பந்தரித்து, ஒரு ஆண்பிள்ளையைப் பெறக் கர்த்தர் அநுக்கிரகம் பண்ணினார்.

ரூத் 4:14 அப்பொழுது ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து: சுதந்திரவாளி அற்றுப்போகாதபடிக்கு இன்று உனக்குத் தயைசெய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவன் பேர் இஸ்ரவேலில் பிரபலமாகக் கடவது.

ரூத் 4:15 அவன் உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனும், உன் முதிர்வயதிலே உன்னை ஆதரிக்கிறவனுமாயிருக்கக் கடவன்; உன்னைச் சிநேகித்து, ஏழு குமாரரைப்பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்றாளே என்றார்கள்.

ரூத் 4:16 நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து, அதை வளர்க்கிற தாயானாள்.

ரூத் 4:17 அயல்வீட்டுக்காரிகள் நகோமிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது என்று வாழ்த்தி, அதற்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்; அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்.

"ஒரு ஆண்பிள்ளையைப் பெறக் கர்த்தர் அநுக்கிரகம் பண்ணினார்" - ரூத் 4:11-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதம் நிறைவேற ஆரம்பிக்கிறது.

"சுதந்திரவாளி அற்றுப்போகாதபடிக்கு" - இது போவாசைக் குறிக்கும். ரூத் 4:17 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பது ஓபேத்தைக் குறிக்காது.

"கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" - தன்னுடைய கணவனும், பிள்ளைகளும் இறந்து போனதற்காகக் கர்த்தரைக் குற்றப்படுத்திய நகோமி இப்போது கர்த்தரைத் துதிக்கிறார்கள். தன்னுடைய வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாமல் வறுமையில் வாடிய நகோமி இப்போது கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று கூறி, தனக்கு தயை செய்த கர்த்தரைப் போற்றிப் புகழுகிறாள். (ரூத் 4:14-21=ரூத் 1:21).

"அவன் உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவன்" - இது போவாசைக் குறிக்கும். போவாஸ் இஸ்ரவேலில் பிரபல்யமானான். (ரூத் 4:14) நகோமியை அவளுடைய முதிர்வயதில் ஆதரித்தான். (ரூத் 4:15) அவளுடைய மருமகளாகிய ரூத்தும் நகோமியைச் சிநேகித்தாள். ஏழு குமாரரைப் பார்க்கிலும் ரூத் நகோமிக்கு அருமையாய் இருக்கிறாள்.

"நகோமிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது" - இந்தக்குழந்தை நகோமிக்குப் பிறக்கவில்லை. போவாசுக்கும், ரூத்திற்கும் பிறந்தது. நகோமியின் குமாரன் மரித்துப் போனான். அவனுடைய பெயரை நிலைநிறுத்துவதற்காக ரூத்திற்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்திருக்கிறது. (உபா 25:5-10).

"ஓபேத்" **(Obed)** - இதற்கு "சேவித்தல்" **(serving)** என்று பொருள். தன்னுடைய பாட்டிக்கு இவன் ஆறுதலாக இருப்பான், அவளுக்கு உதவியாக இருப்பான் என்னும் நம்பிக்கையில் அயல்வீட்டுக்காரிகள் ரூத்தின் மகனுக்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்.

"அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்" - ஈசாய், தாவீது ஆகியோருக்கு ஓபேத் முற்பிதாவாக இருக்கிறான். (ரூத் 4:18-22; 1நாளா 2:3-17; மத் 1:1-5; லூக்கா 3:31-32).

IV. பேரேசுடைய சந்ததி

ரூத் 4:18 பேரேசுடைய சந்ததியின் வரலாறு: பேரேஸ் எஸ்ரோனைப் பெற்றான்.

ரூத் 4:19 எஸ்ரோன் ராமைப் பெற்றான்; ராம் அம்மினதாபைப் பெற்றான்.

ரூத் - தொகுப்புரை

4 அதிகாரம்

ரூத் 4:20 அம்மினதாப் நகசோனைப் பெற்றான்; நகசோன் சல்மோனைப் பெற்றான்.

ரூத் 4:21 சல்மோன் போவாசைப் பெற்றான்; போவாஸ் ஒபேத்தைப் பெற்றான்.

ரூத் 4:22 ஒபேத் ஈசாயைப் பெற்றான்; ஈசாய் தாவீதைப் பெற்றான்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் சந்ததிகள்

1. வானங்களும், பூமியும் (ஆதி 2:4)
2. ஆதாமின் சந்ததிகள் (ஆதி 5)
3. நோவாவின் சந்ததிகள் (ஆதி 6:9)
4. நோவாவினுடைய குமாரரின் சந்ததிகள் (ஆதி 10)
5. சீேேமின் சந்ததிகள் (ஆதி 11:10)
6. தேராவின் சந்ததிகள் (ஆதி 11:27)
7. இஸ்மவேலின் சந்ததிகள் (ஆதி 25:12)
8. ஈசாக்கின் சந்ததிகள் (ஆதி 25:19)
9. ஏசாவின் சந்ததிகள் (ஆதி 36:1-8)
10. ஏசாவினுடைய குமாரரின் சந்ததிகள் (ஆதி 36:9-43)11. யாக்கோபின் சந்ததிகள் (ஆதி 37:2)
12. ஆரோன், மோசே ஆகியோருடைய சந்ததிகள் (எண் 3:1)
13. பேரேசின் சந்ததிகள் (ரூத் 4:18)
14. ஆபிரகாமின் சந்ததிகள் (மத் 1:1-18) அல்லது இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு. ஆபிரகாம், தாவீது ஆகியோரின் வம்சவழியில் இயேசு கிறிஸ்து பிறந்திருக்கிறார்.
15. ஆதாமின் சந்ததிகள் (லூக்கா 3:23-38) அல்லது இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு. ஆதாமின் சந்ததியிலிருந்து இயேசு கிறிஸ்து பிறந்திருக்கிறார். இந்த அட்டவணையில் மரியாளின் வம்சவரலாறு நாத்தான் மூலமாக கூறப்பட்டிருக்கிறது. நாத்தான் தாவீதின் மற்றொரு குமாரன்.